# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.103/2024

### அ.சா. 6 (LW 17)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **Dr,அஹமது ஷேக்** | **தொழில்** | **மருத்துவர்** |
| **த/ பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **16.06.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.
எதிரி VC மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.02.2024 அன்ற நான் முறைப்படி அலுவலில் இருந்த போது 60 வயது மதிக்க தக்க ஊர் பெயர் தெரியாத ஆண் பிரேதத்தை பிணக்கூராய்வு செய்து அறிக்கை வழங்கும் படி பட்டிவீரன்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளை முதல்நிலை காவலர் எண்.1555 திரு.முருகன் என் முன்னர் ஆஜர்படுத்தினார். வேண்டுகோள் கடிதம் ஏற்கனவே **அ.த.சா.ஆ.** 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அங்க மச்ச அடையாளங்களை சரிபார்த்த பின்னர் பிரேத பரிசோதனை மதியம் 2.40 மணிக்கு தொடங்கப்பட்டது, மிதமான உடல் வாகுடைய ஆண் பிரேதம் உடல் முழுவதும் விரைத்து காது, மூக்கு பகுதிகளில் ரத்தம் வழிந்து காணப்பட்டது.

பிரேத்தில் காணப்பட்ட வெளிப்புற காயங்கள்

1. கிழிந்த காயம் 6 X 4 cm மண்டை ஓட்டின் ஆழம் வரை வலது பக்க முன் தலையில் காணப்பட்டது. பகுப்பாய்வு செய்து பார்த்ததில் மண்டைஓட்டின் தோல் கிழிந்து மூளை வெளியில் காணப்பட்டது. ஆழமாக பகுப்பாய்வு செய்து பார்த்ததில் வலது பக்க மண்டைஓட்டு எலும்பு உடைந்து காணப்பட்டது.

2. வீங்கிய காயம் வலது கையின் மோதிர விரலில் காணப்பட்டது. பகுப்பாய்வு செய்து பார்த்ததில் உடைந்து சுற்றி ரத்தக்கட்டுடன் காணப்பட்டது,.

3. கருஞ்சிவப்பு சிராய்ப்பு காயம் 6 X 4 cm இடது கண்ணத்தில் காணப்பட்டது.

4. கருஞ்சிவப்பு சிராய்ப்பு காயம் 6 X 2 cm வலது கண்ணின் கீழ் இமையின் காணப்பட்டது. பகுப்பாய்வு செய்து பார்த்ததில் வலது முகத்தின் எலும்பு உடைந்து சுற்றி இரத்தக்கட்டுடன் காணப்பட்டது.

5. வீங்கிய காயம் மூக்கின் மேல் பகுதியில் காணப்பட்டது. பகுப்பாய்வு செய்து பாத்ததில் மூக்கின் இரண்டு எலும்புகளும் சுற்றி இரத்தக்கட்டுடன் காணப்பட்டது.

6. வீங்கிய காயம் தடையில் காணப்பட்டது. பகுப்பாய்வு செய்து பார்த்ததில் தாடை எலும்பு நடுப்பகுதியில் உடைந்து சுற்றி உள்ள பற்கள் சிதைந்து சுற்றி இரத்தக்கட்டுடன் காணப்பட்டது.

இதை தவிர்த்து பிரேத்தின் மீது எந்த வெளிப்புற காயங்களும் காணப்படவில்லை.

தலைப்பகுதியை பகுப்பாய்வு செய்து பார்த்ததில் கருஞ்சிவப்பு ரத்தக்கட்டு காயம் 8 X 6 cm தோலின் ஆழம் வரை மண்டையின் வலது பக்கத்தில் காணப்பட்டது. மண்டைஓட்டு எலும்பு உடைந்து காணப்பட்டது. மண்டை ஓட்டு சவ்வு கிழிந்து மூளை சுற்றி இரத்தக்கட்டுடன் காணப்பட்டது. மண்டை ஓட்டின் அடிப்பகுதி இரு பக்கங்களிலும் உடைந்து காணப்பட்டது.

வயிற்றுப் பகுதியில் 10 மிலி சிவப்பு நிற திரவமானது எந்தவிதமான அசாதாரண வாசனையின்றி காணப்பட்டது. உடல் உள்ளுறுப்புகள் அனைத்தும் வெளிறி காணப்பட்டது.

உடல் உள்ளுறுப்புகளை ரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தியதில் எந்தவிதமான நச்சு பொருளோ, எத்தனாலோ கண்டறிப்படவில்லை என்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து அறிக்கை பெறப்பட்டது.

இரத்த வகையை அறியும் பொருட்டு இரத்த மாதிரிகள் சேகரம் செய்து மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பபட்டது.

வலது தொடை எலும்பு மரபணு பரிசோதனைக்காக சேகரம் செய்து மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பபட்டது. இதனை தொடர்ந்து 04.05.2024 அன்று எனது இறுதி கருத்துரையாக மேற்கூறிய நபர் தலையில் ஏற்பட்ட காயத்தினால் இறந்திருக்க கூடும் என சான்று வழங்கியுள்ளேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்று **அ.த.சா.ஆ.12.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் வழங்கிய இறுதி கருத்துரை **அ.த.சா.ஆ.13.** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட கற்களால் தாக்கப்படும் போது நான் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் இலவச சட்ட உதவி மைய வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை:</u>**

பிரேதத்தில் மார்பு பகுதியில் காயங்கள் எதுவும் காணப்பட்டதா என்றால் இல்லை.

**<u>மறு விசாரணை – இல்லை</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this

contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.16 20:47:23 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.